T. N. Chandrakasan

Sripatys'

PRACTICAL HOROSCOPY.

Tamil Edition

II Part

By

MISS INDIRA SRIPATY

Reprint from

The "Sothidaparipalini."

PRINTED AT
THE SOTHIDA PRAKASA PRESS
KOKUVIL.

Copy Right.] 1936. [Price 50 Cts.

ஓம்:

ஸ்ரீபதி

அநுபவ ஜாதகம்.

இரண்டாம் பாகம்.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை

ஜோஸ்யர் ஸ்ரீபதி அவர்கள்

ஆங்கிலத்தில் எழுதியதை யனுசரித்து

ஷெயார் புத்திரி

இந்திரா ஸ்ரீபதியால்

தமிழில் எழுதப்பெற்று

கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right.] 1936. [விலை சதம் 50.

அனுபவ ஜாதகம்.

(2-ம் பாகம்.)

திருவாதிரை, சுவாதி, சதயம்.

இராகுதெசை ௵ 18.

புத்தி	வருஷம்	மாதம்	நாள்	மொத்தம் வருஷம்	மொத்தம் மாதம்	மொத்தம் நாள்
இராகு	2	8	12	...	...	...
வியாழன்	2	4	24	5	1	6
சனி	2	10	6	7	11	12
புதன்	2	6	18	10	6	0
கேது	1	0	18	11	6	18
சுக்கிரன்	3	0	0	14	6	18
சூரியன்	0	10	24	15	5	12
சந்திரன்	1	6	0	16	11	12
செவ்வாய்	1	0	18	18	0	0

இராகுமகாதெசை பலன்.

திருவாதிரை, சுவாதி, சதயத்திலே பிறந்தவர்களுக்கு இராகுதெசை 1-வது தெசையாக ஏற்படும். இதன் மொத்த காலம் 18 வருஷம். ஆதலால், ஜென்மநக்ஷத்திரத்தில் சென்றநின்ற நாழிகைகளுக்கேற்ப 17 வருஷம் 11 மாதம் 29 நாள் வரை இருப்பும் ஏற்படலாம். அல்லது ஒருநாளைக்குக் குறையவும் இருப்பு ஏற்படலாம்.

1908-ம் ஆண்டிற்கும் 1928-ம் ஆண்டிற்கும் இடையே உள்ள எனது மும்முரமான தொழிற்காலத்தில் கணக்கில்லாதவர்கள் வந்து என் உதவியைக் கோரினார்கள். அவர்களுள் அநேகர் ராகுதெசை யுடையவர்கள். சிலர் இந்தத் தெசையின் முடிவைக் கிட்டினவர்கள். பலர் தெசை ஆரம்ப காலத்தவர். இவர்களுள் அநேகர் என்மீது அன்புள்ளவர்களானார்கள். எனக்கும் அவர்கள்மீது மட்டில்லாத அன்பும் கிருபையும் ஏற்பட்டிருந்தன. சிலர் தங்களுடைய ஜாதகத்தைக் கவனமாகக் கணிப்பித்துவைத்திருந்தார்கள். பலருக்குத் தங்கள் கிரகநக்ஷத்திராதிகள் கூடத் தெரிந்திருக்கவில்லை.

ஒருவன் இத்தெசை ஆரம்பிக்கும்போது வருங்காலத்தைப்பற்றிக் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படி இல்லாவிடில், அவன்வாழ்வு பிறேக் இல்லாத மோட்டார்ரதம்போலும் ஆகும். நான் உங்களுக்கு வற்புறுத்தவேண்டியது: உங்களுக்கு நல்ல ராகுதெசை ஏற்பட்டிருந்தால் நிச்சயமாகவே உங்களுக்கு அநுகூலம் உண்டாகும். ஆனால், அந்த அநுகூலம் என்று சொல்லப்படும் முடிவாற் கிடைக்கும் பலனே நிஷ்பிரயோஜனமே.

சாமானிய ஸ்திரீபுருஷர்களுக்கு இத்தெசையில் கிருகசுபம், மனப்பாக்கியம், குழந்தைகள், ஆரோக்கியம், சீவியசாந்தி ஏற்படவேஏற்படாது. ராகுதெசை உள்ள குழந்தைகள் தேகபுஷ்டியோடிருப்பதில்லை. அவர்கள் முரட்டுப்பிடியுள்ளவர்களுமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் குணமோ தெசாபுத்தியும் மாறமாற நன்மைக்குத் திரும்புகிறது. கடக மீனத்திற் பிறந்தவர்கள் ராகுவின் யோகத்தை அதிகமாக அநுபவிக்கிறார்கள்.

ஜாதகனுக்கு யோககாரகனுடைய வீட்டிலே ராகு இருந்தால் அவனை உயர்த்திவைக்கும்.

இதில், மனிதர்கள் பிரபல நியாயதுரந்தரர்களாகவும், சித்தியுள்ள வைத்தியர்களாகவும், நுட்பமான சத்திரவைத்தியர்களாகவும் பெயரையும் கீர்த்தியையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் செல்வம், மனப்பாக்கியம், கிருகத்தாச்சிரமம் இவற்றின் நிலைபேறு அவர்களுக்குக் கிடைப்பதே இல்லை. அனேகருக்கு மதி தப்பிநடப்பதால் அவர்கள் பெருமையே வீழ்ச்சிக்கும் காரணமாகிறது. மதுபரிபாலன உத்தியோகஸ்தர்கள் அனேகர் தொல்லைக்காளானார்கள். பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத்தை இழந்தார்கள். நீதிபதிகள் ஆசனம் இழந்தனர். ஆனால், இந்தக் குரூரக் கிரகத்தின் கொடுமையில் இருந்து நியாயவாதிகளும் வைத்தியர்களுமே தப்பிக்கொண்டார்கள். இக்காலத்தில் ஓர் தொழிலிற் பங்காளிகளாக அல்லது தொழிலாளிகளாக இருப்பதிலும் பார்க்க ஏவலாளர்களாக இருந்து காலத்தைக் கழிப்பது விசேஷம். இந்த ராகுதெசையிலே நடக்கும் ஏற்ற இறக்கங்களை ஒருவன் சீர்ப்படுத்த முடியாதவனாகிறான். அதனால் தம் ஸ்திதியை அனேகர் அறியாதவர்களாகிறார்கள். ஆனால், இக்காலங்களிற் சில வைத்தியர்களின் கீர்த்தி சரிக்குச்சரி கிளம்பியது.

இராகுதெசை சுயபுத்தியிலே ஆனந்தவாயுவும் ஹிஸ்றீறியாவும் பைத்தியமும் ஏற்படவும், கட்டுப்பாடில்லாது சுழலவும், இரண்டாவது புத்தியான குருவின் கரங்களால் தடவித் தட்டிக்கொடுக்கப்படமுன் மூன்றாவது சனி புத்தியில் தட்டிப்பேச ஆளில்லாது உயர்ந்த கௌரவத்தை அடையவும், அடுத்த புதன்புத்தியில் தன் போலிநிலையை ஸ்திரமாக்க அலையவும், கேது வரும்போது பத்தரைவருஷத்துப் பிரயாசையெல்லாம் சிறுவர் மணற்சோறு

போலாகவும், தான் பலருக்கு அக்கிராசனம் வகித்தும், பஞ்சாயத்து நியாயம் தீர்த்தும் வைத்த காலம் போகப் பொய்க்குற்றச்சாட்டு, கடன், எட்டாங்கட்டளை, பெண்பறி வழக்கு, விவாகரத்து முதலிய குற்றச்சாட்டில் தானே குற்றவாளியாகக் கைகட்டி நிற்கவும், ராகுவில் சுக்கிரபுத்தி வரும்போது இவையெல்லாவற்றிலும் வெற்றியடைந்தும் அரசாட்சியாரை ஜயித்தும் இழந்த வேதனத்தையும் மறுபடி பெற்று, மானநஷ்டப் பணத்தை அறவிட்டு, குதிரைப்பந்தயத்தில் ஜயித்து, ஏராளமான போகங்களை அனுபவிக்கவும், சூரியபுத்தி வரும்போது தம்மை வீழ்த்திவிடுவதற்குச் சதா இரகசிய முயற்சி நடக்கவும், புகைரதவண்டிகளைச் சந்திரபுத்தி வந்தவுடன் ரிசேர்வ் செய்யவும், உயர்ந்த நிலையினால் வாயிலில் இரண்டு மெய்காப்போர்களை நிறுத்தி வைக்கவும், தம் கௌரவத்தினால் மற்றையாரோடு கலந்துகொள்ளமுடியாமல் பிதாமாதா சகோதரர்களையும் தூரநில் என்று சொல்லவும், ராகுதெசை முடியும்போது செவ்வாய்புத்தி காலத்திலே தன் கெதிகள் யாவற்றையும் இழந்து, அல்லது தன் கஷ்டங்கள் எல்லாவற்றிலும் இருந்து விலகி, சென்ற பதினெட்டுவருஷகால சுகதுக்கங்களையும் மறந்து புதிய சீவியம் ஆரம்பிக்க எத்தனிக்கவும் ராகுதெசையுடையவன் ஒருவனுக்கே ஏற்கும். இந்த அநுபவத்தோடு மறுபடி சீவியத்தை ஒழுங்குசெய்துகொள்ள ஒருவனுடைய சீவியகாலத்தில் இரண்டாம்முறை ராகுதெசை வாராமலிருப்பது பரிதாபமே! ஆதலால், விசாலமான அநுபவமுள்ள ஓர் ஜோஸ்யனையாவது சாமர்த்தியமாக ராகுதெசையைக் கழித்த ஓர் நண்பனையாவது கேட்டு நடத்தல் அவசியமே. ராகுதெசையில் புதன்புத்தி நடக்கும்போதே காந்தியும் கைதியானார். கேதுபுத்தியில் வயிற்றுக்கட்டுக்குச் சத்திரஞ் செய்தனர். சுக்கிரபுத்தியில் விடுதலையடைந்து உலகப்புகழ் பெற்றார்.

வியாழன் சனியில் கோசரங்கள் கேடாயின், ராகு முடிவு அல்லது கேதுபுத்தியில் அதிக கஷ்டத்திற்கு ஆளாவார்கள்.

நம்முடன் சென்ற ஐந்து அத்தியாயத்தையும் கவனித்தவர்கள் காலத்திற்கேற்ற கிரகபலன்களை உணர்ந்திருப்பார்கள். பதினாறு வயசு வரை பாலர்கள் பலன் பெற்றோருக்கே. மனைவியின் பலன் தலைவனுக்கே. புருஷனின் பலன் அவன் எசமானுக்கும் பங்காளிக்குமே. மீனத்தில் ஜனித்தோரிலும் பார்க்கக் கடகத்தவர்கள் கஷ்டத்தைச் சகிக்கிறார்கள்.

ஆறில் ராகு இருந்தால் ஜாதகி ஜனசமூகத்திலும் ராஜ்ய சபையிலும் உயர்நிலையடைகிறான். கடகத்தில் பிறந்தோர்களுக்கு ஆறில் ராகு இருப்பின், அவர்கள் நிலையிலும் நிறையிலும் மற்றையோரை அணுவாக்குகிறார்கள். இத்துடன் குருவும் கேந்திரத்துறில் பிரபுவுக்கு எதிர்வாக்கில்லை. தெசாந்தத்தில் வரும் புத்தி மிகப் பிரதானமானது என்று ஏற்கனவே சொல்லிவிட்டோம். ராகுவின் தெசை செவ்வாயோடு கழியும்.

சிங்கலக்கினத்திற் பிறந்தோர் செவ்வாயை மாத்திரமல்லச் சூரியசந்திரர்களையும் யோககாரகர்களாக அடைகிறார்கள். ஆகையால், ஆயிரம் ராகுக்கள் சேர்ந்தும் சிங்கலக்கினக்காரனை அசைக்கமாட்டா. கடகத்திற்கும் ஒருமட்டாக அப்படியே.

புதன்புத்திமுடிவு கேதுசெவ்வாய் புத்திகளிலும் ராகுவின் சுயபுத்தியிலும் ஒருவன் மனைவியின் சுகத்தைக் கவனிக்கவேண்டியது.

கர்க்கடக சிங்க லக்கினத்தில் பிறந்தோர் செவ்வாய்க்கு அஞ்சவேண்டியதில்லை. சூரியசந்திரரோடு கேது சேர்ந்தால் புத்திகள் நாசத்தையே கொடுக்கும். புதன் ஆறுபன்னிரண்டில் இருக்க, புதன்வீட்டில் ராகு இருந்தால் திசை நன்றாக நடப்பதுண்டு. ஆறில் புதன் இருக்கப்பெற்றோன் எவ்வளவு இடம்பமாக இருந்தாலும் கையிற் காற்காசு இல்லாதவனே. வேண்டியதெல்லாம் கிடைக்கலாம். அவனுக்கு ஆபத்துக் காலத்தில் உருட்டவும் புரட்டவும் பல வழிகள் ஏற்படும். இன்னும் அப்படிப்பட்ட ஒருவனிடத்தாவது நான் பணத்தைக் காணவில்லை.

நாகரீகமுற்றோர்களில் ஆசியாக்கண்டத்துள்ளோருள்ளும் புதனில் குடும்பகலகம் ஏற்பட்டுக் கேதுவில் விவாகரத்தையும் பார்த்தேன். சுக்கிரன் எவ்வளவுதான் கெட்டிருந்தாலும் ராகுவில் சுக்கிரன் ஏற்பட்டால் ஒருவன் வியாச்சியத்தில் ஜயிக்கிறான். பிரிந்த மனைவியோடு உறவாடுகிறான்; அல்லது புதிதாக மணக்கிறான். ராகுதெசையில் சுக்கிரபுத்தியில் அற்ப மனுஷர்களும் பட்டவர்த்தனரைப் பொடிபண்ணியிருக்கிறார்கள். சூதிலும் பந்தயத்திலும் சொற்ப லாபம் கிடைப்பதுமுண்டு. அது பெயரளவிலோ காரியத்தளவிலோ என்பது மற்றைய கிரகங்களால் மதிக்கப்படும்.

குருபுத்தியில் தன் தன் சுகத்திற்கு வேண்டிய தளபாடங்களைப் பெற்றவன் சனி வருங்கால் தீண்டலாகாது. சனியில் பெற்ற மகிமையும் பெருமையும் கீர்த்தியும் புதனில் மறக்கப்படவேண்டும். ராகுவின் வலிமை எம்மட்டாயினும், புதனின் பெருமை எப்பெரிதாயினும் இரண்டும் சந்திக்கும் பொழுது கஷ்டமே கஷ்டம்.

புதன்புத்திக் கடைசியிலும் கேதுபுத்தியிலும் படித்த பாடங்களை மாத்திரம் எப்புத்தியிலும் உபயோகிக்கலாம். புதன்புத்திக் கடைசியில் ஒருவன் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்று தப்பித்துக்கொள்ள வழி பார்க்கவேண்டும். விட்டுவிட்டு ஓடினாலும் சுக்கிரனில் மறுபடி தன் நிலை மாத்திரமல்ல, அக்கிராசனமும் தவறாதென நம்பியிருக்கலாம். சுக்கிரன் கெட்டவனாயினும் இழந்தன பெறுதல், காத்திரா லாபம், புதியன புகுதல் திண்ணம்.

கெட்ட சுக்கிரன் எடுத்ததைக் கொடுத்துக் கொடுத்ததை எடுப்பான். அல்லது அநேகமாகச் சூரியனையே எடுக்க விடுவான். இந்தச் சுக்கிரனில் தானும் தன் பேறுகளைக் கவிழ்த்துவிட்டுப் போகாதபடி ஒருவன் விழித்திருக்கவேண்டும். இன்னுஞ் சிக்குகளுள் மாட்டிக்கொள்ளாதபடி இலகுவில் கழற்றிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். மேட சிங்க விருச்சிக தனுவிற் பிறந்தோர் சூரியனில் கஷ்டப்படுவதில்லை. சாமானிய சந்திரனும் தப்பாது ஏற்றம் கொடுக்கும். சிங்கலக்கினத்தோன் வசீகரமும், விருச்சிகத்தோன் மனநிலையும் பார்க்க ஆனந்தத்தைக் கொடுக்கும். கடகத்தில் ஜனித்தவனுக்கும் குற்றமில்லை.

ராகு மேடம் இடபம் மகரம் கடகம் கன்னியில் இருக்க ஜனித்தோர் மற்றையோரிலும்பார்க்க உயர்நிலை அடைவர். சூரிய சந்திரருக்கு ராகுவோடு பகையாதலால் பணத்தொல்லையும் மனத்தொல்லையும் அந்தர்கதையாகும்போது சகஜமே.

1918-ம் ஆண்டு இலங்கையிலிருந்து ஆட்டமாடி இன்னவிடம் என்று தெரியாது ஓட்டமெடுத்த வாலிபரை நான் அறிவேன். அவர்கள் 1936-ம் ஆண்டுக்கு முன் திரும்பிவரமாட்டார்கள் * என்பது திண்ணமே.

சனிபுத்தியைச் சாதுரியமாகக் கழித்தோர் ராகு முடிந்தும் சிறப்பாக இருக்கிறார்கள். செவ்வாயைச் செவ்வையாக உபயோகித்தவர்கள் நன்றாகக் குருவிற் பிரவேசித்தார்கள். எவ்வகையும் ராகுவிற் படிக்கவேண்டியவைகளைப் படித்துமுடித்துக் குருவிற் பிரவேசிக்கவேண்டுமென்பதே என் புத்திமதி.

புதன் கேது சுக்கிரர்களை இன்னும் விபரிக்கவேண்டியிருக்கிறது. ராகுவில் புதன் வரும்போது ஒருவன் நடைப்பிணமாகவே இருக்கிறான். எப்போதும் தூக்கவிழிப்புள்ளவனாக இருக்கிறான். பிறர்காரியம் பார்த்தும் நன்றி பெறுவதில்லை. இறந்தோர் வகையற்றோருக்கு உதவிபுரிந்து குறையே கேட்பான். வாதவாய்வுப் பீடைகள், மூல நேத்திர ரோகங்கள், வெட்டைமேகச்சூடுகள் அனேகமாக ஏற்படும். ஒருவன் அனாதையாகிறான். காத்திராக் கேடுகள் சூறாவளிபோல் அவனைச் சிதறஅடிக்கின்றன. கிணற்றில் தலைகீழாகத் தொங்குபவனுக்கு நாவில் விழுந் தேன்துளிபோல் வரும் சிற்றின்பங்கள் அவன் நாசத்திற்கே ஏற்படுவன.

கேதுபுத்தி ஆரம்பித்தவுடன கஷ்டங்கள் வெளியாகும். இஷ்டர்களும் கைவிடுவார்கள். சுற்றமும் இகழும். மனைவியும் கைவிடுவாள். மறைந்திருந்த நோய்களெல்லாம் வெளிக்கொள்ளும். ஒருவன் துரும்பு

* இது 1929-ம் ஆண்டு எழுதப்பட்டது.

போலாகிறான். இரணரோக சோகங்கள் சத்துருக்கள் எல்லாம் விருத்தியாகும். என் விருப்பமொன்றுண்டு. சுக்கிரன் பிரவேசிக்கும் வரையுள்ள ஒரு வருஷம் 18 நாள் வரை ஏதாவதொரு உபாயமான மருந்தாசியைச் செலுத்தி தற்கால ஆத்மசாஸ்திரிகள் இவனைப் பேணிவைப்பது சிரேஷ்டம். மனைவியின் யோக்கியதைக்கும் பழுது வரலாம். முன் கூறியபடி கைவிடவும் கூடும். கல்யாணரத்து நேரிடலாம். அக்கிரமமான பராபரிப்பு வழக்குகள் ஏற்படுவதும் உண்டு. உத்தியோகமிருப்பின் பங்கமும் உண்டு. இன்னும் ஒருவன் சுக்கிரனை எதிர்பார்த்துச் சகித்திருக்கிறான். நிலையாலும் புத்தியாலும் உன்னிற் குறைந்தவர்களும், தாழ்ந்தவர்களுள் தாழ்ந்தவர்களும் உனக்குப் புத்திபுகட்ட வருவார்கள். உனக்கு மனோவேதனை கிளம்பக்கூடிய விதமாக உன்னில்தாழ்ந்தோர் உனக்கு இரக்கமுங் காட்டுவார்கள். நண்ப! ஜாதகியே! இது உன்னால் தாங்கமுடியாது. உனக்கு இப்போது ராகு தெசை நடப்பதால் உன் கோபத்தை அடக்கு.

ராகுவில் மாத்திரமல்ல, சனிதெசையாயிருந்தாலும் கஷ்டகாலம் ஏற்பட்டால் ஒருவனுக்கு மனநிலைதானும் தவறுகிறது. இதை நான் ராகுவின் கீழ் கூறினாலும் எந்தக் கெட்ட தெசையிலுமுண்டு. சூது, குதிரைப்பந்தயப்பித்து, ரஸவாதப்பைத்தியம், புதையலெடுக்கும் ஆசை, ஆகாயக்கோட்டைக்காகக் கடன்படுவதுமுண்டு. ஒருவன் மனக்கோட்டை கட்டி உடனிருக்கும் தன் கஷ்டங்களையும் மறக்கிறான். ஓர் மலட்டு விதவை தன் மேல் நேசமுள்ளவளென்றும் சொத்துக்களையும் தனக்குச் சீக்கிரத்திற் கொடுப்பாளென்றும் ஏமாந்தவர் சிலரை எனக்குத் தெரியும். ஜோஸ்யனும் சில ரூபாய்களுக்காக 'ஸ்திரீஜனங்களால் நன்மை' என்று சொல்லிவிடுவான். வாலிபர்கள் உயர்ந்த சீதனத்திற்குத் தம்மை விலைப்படுத்தவும் காத்திருப்பார்கள். நாகபட்டினத்தில் ஓர் பிரபுவுக்கு இரண்டு வீடுகளிருந்தன. இவையே அவர் கஷ்டகாலத்தில் எஞ்சியன. இவர் ஒன்றில் வசித்ததால் மற்றவீட்டு வாடகை வயிற்றை நிரப்ப இரண்டொரு மூடை அரிசி கொடுத்தது. நிலத்தின்கீழிருக்கும் திரவியப் புதையலின் தோஷத்தால் இவருக்குத் தரித்திரம் ஏற்பட்டதென்றும், தெய்வப்பிரீதிசெய்து வெட்டிப் புதையலை எடுத்து நவதானியம் விதைத்தால் விருத்தி உண்டாகுமென்றும் அவரது குடும்பஜோஸ்யர் கூறினார். பாபம்! வீடு இடித்துப் பரவப்பட்டது. சீவனத்திற்கு வழியும் கெட்டது. அதன் மேற்பட்ட தீங்கு ஒன்றும் நடக்கவில்லை. சில மனைவியர்கள், தன் தலைவன் இறந்து, முன்ஒருமுறை தனக்கு வாக்குப்பண்ணியவன் தன்னை மணர்தாலோவென விரும்பி வாயூறுகிறார்கள். டம்பாச்சாரி விலாசம் ஆடியவர்கள் அனேகர். புருஷரும் ஸ்திரீகளும் நற்புத்தியை அவமதித்து, அநேகம்போக்கிற் பிரவேசித்து, நிரீச்சுரவாதங் கொண்டு, சிற்றின்பப்பித்துப் பிடிக்குங் காலமும் இதுவே. இனி நாம் குருவை ஆராய்வாம்.

—

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி.

வியாழமகாதெசை வரு[illegible]16.

புத்தி	வருஷம்	மாதம்	நாள்	மொத்தம் வருஷம்	மொத்தம் மாதம்	மொத்தம் நாள்
வியாழன்	2	1	18	...	...	...
சனி	2	6	12	4	8	0
புதன்	2	3	6	6	11	6
கேது	0	11	6	7	10	12
சுக்கிரன்	2	8	0	10	6	12
சூரியன்	0	9	18	11	4	0
சந்திரன்	1	4	0	12	8	0
செவ்வாய்	0	11	6	13	7	6
இராகு	2	4	24	16	0	0

வியாழமகாதெசை பலன்.

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்களிற் பிறந்தவர்களுக்கு வியாழதெசை முதலாவது தெசையாக ஏற்படும். மற்றையோர்களுக்கு ராகுதெசைக்கு அடுக்க ஆரம்பிக்கும். ஒருவன் பிறந்த இலக்கினத்திற்கு வியாழன் சுபனாயிருந்தாலும் பாபியாயிருந்தாலும் அவன் நற்குணமும் சுயநம்பிக்கையும் சுயமரியாதையும் உள்ளவனாகச் சீவிக்கிறான். அவன் பொதுவாகச் சுத்தமானவனாகவும் கிரமமுள்ளவனாகவும் இருக்கிறான். அவனுக்கு நன்மையும் மேன்மையுமான காரியங்களில் எப்போதும் விருப்பு இருக்கும். சில்லறைக் கல்விகளில் அவன் நேரத்தைக் கழிக்கமாட்டான். வீண்வாதம் வீண்பசப்பு அவனுக்கு வெறுப்பைக் கொடுக்கும். கழிந்துபோன ராகுதெசையில் அவனுக்கு அதிக பணநஷ்டம் ஏற்பட்டிருந்தால் அன்றி அவன் அதிகமாகப் பொருள்ஈட்ட விரும்பமாட்டான். அவனுடைய நோக்கங்கள் எல்லாம் மேன்மையானவைகளாக இருக்கும். சில காலங்களில் ஞானமார்க்கங்களில் மனம் பதிவதால் தனக்குக் கிரமமாக வரவேண்டிய முதலையும் அசட்டைசெய்துவிடுவான்.

வியாழதெசை உள்ள குழந்தை மனதைக் கவர்வதாகவும், மேன்மை பொருந்தியதாகவும், மற்றைய குழந்தைகளிலும் பார்க்க உயர்தர மதிப்புப் பெறுவதாகவும் இருக்கின்றது. குருதெசை உள்ள குழந்தையை மனிதர்கள் பார்த்து விரும்புகிறார்கள். ஏதாவது ஓர் வேலைநிமித்தம் வெளியே செல்லும்போது குருதெசைக் குழந்தையைப் பார்ப்பதே நற்சகுனமாகும்.

எஜமாட்டிக்குக் குருதெசை நடந்தால் அந்த வீட்டைப் பார்த்தாலே ஆனந்தமாக இருக்கும். உயர்தர சீவியமும் இன்பமும் சாந்தமும் அவ்வீட்

பக்கம் 28, 29. [illegible]
17. [illegible]

டில் குடிகொண்டிருக்கும். அதிக சாத்வீகமான ஜாதகங்களுக்குப் பின் வயதில் ஆராய்வில்லாத முரட்டுப்பத்தியால் மார்க்ககாரியங்களில் மூடவிசுவாசம் ஏற்படக்கூடிய ஒரு குறையே தவிர, சாமானியமாகக் குருதெசை உவந்ததே.

விவரித்துக் கூறுகில், குரு லக்கினத்திற்குச் சுபனுயின், புத்திக்கூர்மை, சென்றவிடமெல்லாம் சிறப்பு, பலராலும் மதிப்பு, சன்மார்க்கநடையால் ஏற்படும் தைரியம், தாழ்மையான நடை, லக்ஷ்மீகரம், தயாளகுணம், பிரபுத்தன்மை, சமயசங்கங்களில் நடப்பு, நிலையான பெரியோர்களால் ஆதரவு, பந்துக்களுள் தலைமை, விசேஷநண்பர் ஆகிய இவற்றைக் கொடுக்கும். இலக்கினத்திற்குப் பாபியாயின், சில தவறுகளைத் தான் செய்யாதிருந்தும் குறைகேட்டுக்கொள்ளுதல், புத்திரர்களின் கீழ்ப்படிவீனம், அவர்கள் நோய்வாய்ப்படுதலால் மனப்பீடை உண்டாம். வித்தியா விஷயமாகச் செலவிடும் பணத்திற்குப் பதிற்பலன் கிடைப்பதரிது. வேலையாட்களும் கையாட்களும் நம்பமுடியாதவர்களாகவும், பெரியோர்களும் எஜமானர்களும் இருப்பின், அவர்கள் வெறுக்கப்படக்கூடியவர்களாகவும் ஆவார்கள். பயிர்ச்செய்கை முதலிய முயற்சிகள் போதிய பயன் கொடுக்கா. அடிக்கடி திருட்டுப்போதலும், செவிமந்தம் அல்லது கர்ணரோகங்களும் உண்டாம். ஆனால், இன்னொன்று: ராகு, சனி, கேதுவைப் போல இக்கிரகம் பாரிய ஏற்றஇறக்கங்களைக் கொடுப்பதில்லை. குரு மிகக் கெட்டவனுயினும் தானே விசேஷ தீங்கு விளைப்பதில்லை. சுயபுத்தியில் யாதும் பலன் நடக்காது. விசேஷ குருவானல் பின்னல் வரப்போகும் நன்மைக்குத் தகுந்த விசேஷ தீங்கைச் செய்யவும் கூடும். இதற்கு முன் கழிந்த ராகு தெசையில் யாதும் சுபம் நடக்காதிருந்தால், ஜாதகி விவாகத்தை அபேக்ஷித்திருந்தால், மனைவியைப் பிரிந்திருந்தால், அல்லது இழந்திருந்தால், சுயபுத்தியிலேயே சமாதானம் அல்லது விவாகம் ஏற்படும்.

குருதெசையிற் சனிபுத்தி ஏற்படும்போது பலவகையான மாறுதல்கள் உண்டாகும். சந்நியாசயோகத்திற் பிறந்தோர்க்குத் துறவும் ஏற்படும். அவர்கள் தமது ஆகமத்திற்கேற்ற வேலைகளிலும் தலையிடுகிறார்கள். சாமானியமானவர்கள் தங்கள் நிலையினின்று விலகிவிட விரும்புகிறார்கள். அல்லது விலகவேண்டிய சந்தர்ப்பங்கள் நெருங்கிக்கொண்டேவரும். நம் நாட்டவர்களுள் அநேகர் தமது மருகர், புத்திரர், பங்காளிகளிடத்தில் தம் தொழிலை ஒப்படைத்துவிடுகிறார்கள். சாத்வீக தைவீக சக்திகள் அதிகரித்தலால் தேகம் மெலிந்து புதுச்சீவியத்திற்கேற்ப மனோதேகசக்திகள் புது உயிர் பெறலாம். பலர் அஜீரண உபாதை, மூத்திரரோகங்களுக்கு ஆளாகிறார்கள். என் புத்தியைக் கோரிநிற்போருக்கு இராப்போசன நிறுத்தம், மட்டான ஆகாரம், பசைகொழுப்புள்ள உணவுகளை நீக்கல் ஆகிய இவற்றைக் குறிக்கிறேன்.

குரு ரிஷபதுலாத்திற்கு நன்மை செய்வதில்லை.
" மிதுனகன்னிக்கு அதிக நன்மை செய்வதில்லை.
" மகர கும்பங்களுக்கு சாதகமில்லாதவன்.
" தனுசுமீனத்திற்கு தீமை அதிகம் செய்வதில்லை.

பார்வை பெற்றாலே கெட்டவர்கள்.

குருவில் புதன் பிரவேசிக்கும்போது குறைந்த கல்வியுடையோனும் விசாரம் செய்ய ஆரம்பித்துப் புதன் முடிவதன் முன் சபைக்கேறக்கூடியவனுகிறான். இக்காலங்களிற் கற்றோர்கள் விசேஷ சாஸ்திராப்பியாசஞ் செய்கிறார்கள். சாமானியமானவர்கள் ஆகமசாஸ்திரப்பேச்சில் சந்தோஷமடைகிறார்கள்.

கேது வரும்போது கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சில காலங்களில் இவன் கைதியாகலாம். சடன்மறியல் ஏற்படுவதுமுண்டு. இதுபோன்ற ஓர் காலத்து, பல முறையும் கடிதப் போக்குவரத்தால் நாயகனைத் தன் சமீபத்திற்கு வருவித்திக்கொள்ளத் தவறிய மனைவி, தூரத்தில் இருக்கின்றனள் என்று காத்திருந்த தன் பர்த்தாவை அடைந்தனள். தலைவனே இவ்விதமான சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர். "இருந்த இடத்திலிருந்து அதிக தூரத்தில் செல்லவேண்டிய காலத்தில் என் சமீபத்தில் வந்ததால் கிரகசாரத்தால் வருவனவற்றிற்குத் துக்கப்படாதே. திலகர் கைதியான காலம் பிரிவுக்கே உவந்தது" என்று கூறினர்.

பின்பு அன்று நடுப்பகலில் ஆயாசநிவிர்த்திக்காகத் தொப்பியையும் கையிலெடுத்து வீதியில் இறங்கினர். இருசேவகர் "ஐயா! உவாறென்ற்" என எதிர்கொண்டார்கள். பிரபு ஆராய்ந்து, வாஸ்தவத்தில் ஆனதெனத் தீர்மானித்து, தாமதமில்லாது நியாயஸ்தலத்தை யடைந்தனர். மனைவிக்கும் தெரிவித்தார். காத்திருந்தபடியால் அவள் சற்றும் கலங்கவில்லை. இவரும் நீதிஸ்தலத்தில் இருந்து அதிதூரத்துக்கு அனுப்பப்பட்டார். இவரோ சிங்கலக்கினத்திலே குரு உதயத்தில் ஜனித்தவர். உடனே சிறுகக் கோபம் மூட்டப்பெற்றாலும் யாதுந் தீங்குக்கு ஆளாகவில்லை. உடனே அவர் திரும்பி வரவில்லை. கேதுவைக் கழித்தே திரும்பினர். இதற்கிடையில் பொருள் வரத்தும் கீர்த்தியும் இவருக்கு ஏற்பட்டது.

இக்காலங்களில் இனசனங்களிலிருந்து பிரிந்திருத்தல், உத்தியோகஸ்தர்களாயின் ஆபீசிலிருந்து லீவு பெற்றுக்கொள்ளுதல், மேல்அதிகாரிகளுக்கு அமைந்துநடத்தல் விசேஷமாகும்.

குருதெசையில் சுக்கிரபுத்தியிலே அநேகருக்கு விசேஷ பலன்கள் நடந்திருக்கின்றன. ஓர் புகைரத உத்தியோகஸ்தர் குதிரைப்பந்தயத்தில் 50,000 ரூபா பெற்றனர். இவர் பிறந்த சிங்கலக்கினத்திற்குக் குருவாவது சுக்கிரனாவது உச்சயோகமுடையவரல்ல. கோசாரமும் சார்பாகவிருந்திருக்கலாம். சூரியபுத்தி காலத்தில் மேடசிங்கதனுவில் ஜனித்தோர் கம்பீரமாக நடக்கின்றனர். மீனவிருச்சிகத்தில் பிறந்தோர்களுக்குச் சந்திரபுத்தி நெடுநாள் காத்திருந்த நன்மைகளை அல்லது ஒருநாளும் காத்திராத நன்மைகளைச் செய்யும். காலாந்தரத்திலே மனைவியோ குழந்தையோ பொருட்சேர்க்கையோ உண்டாகலாம்.

வியாழதெசையில் செவ்வாய்புத்தியைப்பற்றிக் கூறுவதற்கு எனக்குப் பயமாகவிருக்கிறது. கஷ்ட நஷ்டங்களை எழுதிப் பக்கங்களை நிரப்பவும்

எனக்கு விருப்பமில்லை. சடக சிங்கத்தில் பிறந்தோர்க்கும் செவ்வாய் தீங்கு செய்கிறானென்றால் மற்றவர்கள் கதி என்னாகுமோ? இராகுபுத்தியில், இராகு சுபனாயிருந்தாலும் நடந்த $13\frac{1}{2}$ வருஷப் பேறுகளைப் பிடுங்கிக்கொள்ளுகிறான். ஒருவன் சாவதானமாகவும் கவனமாகவும் இராகுபுத்தியைக் கழித்துக்கொள்ளவேண்டும். அல்லது கெட்ட கோசாரமும் சேர்ந்தால் அனேக அரும்பேறுகளுக்கு முடிவு ஏற்படும்.

சனிசேர்க்கை அல்லது சனிபார்வை இல்லாதபோது மேடலக்கினத்தில் ஜனித்தோன் வியாழதெசையில் சமபலனை அடைகிறான். இடபதுலாத்தில் பிறந்தவர்கள் பொருள்முடை உள்ளவர்களாய் இருந்தும், மற்ற வகைகளில் நல்ல நிலை அடைகிறார்கள். இதற்கு நியாயம் இன்னும் சுருதிகளில் நாம் படிக்கவேண்டித்தான் இருக்கின்றதுபோலும்.

மூன்றுபதினொன்றுக்கு அதிபர்கள் தம்தம் தெசையில் நம்மவர்களுள் அனேகரை உயர்த்தியிருக்கிறார்கள். இவ்விதமான ஓர் குரு தெசையில் ஓர் மகாராஜாவுக்கு மந்திரியாக இருந்த ஒருவரை நான் அறிவேன். குரு இடபதுலாக்காரருக்கு உச்சம் அடைந்திருந்தால் வறுமையே பிறப்புரிமையாகும். துலாலக்கினத்திற் பிறந்தவருக்கு உச்சமான குருவின் தெசை நன்மையானதே—மிகவும் நன்மையானதே என அபிப்பிராயம் கொள்ளும் சில சோதிடரை நான் அறிவேன். ஆம், ஆம். பராசரரிஷியின் கிரந்தங்களைப் பார்த்து மாத்திரம் இவ்வாறு சொல்லிவிட்டேனென நினைக்கவேண்டாம். என் நீண்டகால அனுபவத்தில் இவ்வகையான உச்சங்களால் ஏற்பட்ட நாசமான பலன்களைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்திருக்கிறேன். உச்சக் கிரகங்கள் கெட்ட வீடுகளுக்கு அதிபரானால் பன்மடங்கு தீமை செய்வர் எனப் பராசரரிஷி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மிதுனகன்னியில் பிறந்தவர்க்குச் செவ்வாயும், கடகசிங்கவிருச்சிகத்திற் பிறந்தோர்க்குப் புதனும், தனுமீனத்திற் பிறந்தோர்குச் சுக்கிரனும் சம்பவித்தாலும், இவைபோன்ற வேறு கிரகஸ்திதிகள் ஏற்பட்டாலும் நான் பலன்சொல்லக் கூசுகிறேன். கூச்சம் மாத்திரமல்ல. எனக்குப் பலன் சொல்லும்போது பயங்கரமும் ஏற்படுகிறது. ஒருவனுக்குக் குருதெசை வரும்போது, அவன் மிதுனகன்னியில் பிறந்தவனாயின் ஜனனகாலத்து ஆயுள்யோகம், தனயோகம் விசேஷமாக ஏற்பட்டிருந்தாலன்றித் தேகமும் பொருளும் வரட்சியையே யடையும். விசேஷமாகச் சிகிச்சைசெய்யும் ஒரு வைத்தியன் உபயோகமில்லாத சமயங்களில் தன் சக்தி முற்றையும் செலுத்துவதில்லை. அதுபோல் மிதுனகன்னியில் பிறந்து குருதெசையோடு இருப்போர்க்குக் கஷ்டகாலங்களில் சோதிடர்களும் புத்திபுகட்டப் பிரயத்தனப்படவேண்டியதில்லை.

கடகலக்கினத்தில் பிறந்தோன் குருதெசையில் கெட்ட சனியின் சேர்க்கையின்றேல் கஷ்டம் அனுபவிக்கமாட்டான். இன்னுமொன்று

குரு சாத்வீகமான கிரகமாதலின் அதிகமாக லௌகீக சுகங்களைக் கொடுப்பதில்லை.

சிங்கவிருச்சிகங்களில் பிறந்தோர்கள் குருதெசையில் குற்றமில்லாது காலத்தைக் கழிக்கிறார்கள். இவர்களுக்குக் குரு சாத்வீகராஜசங்கள் சமத்துவம்பெற்று, ஓர் பட்டினவாசிக்கு உவந்ததாகிறது. ஏற்ற இறக்கங்கள் விழுக்காடுகள் ஏற்படுவதில்லை. சமமான சாந்திபெற்ற மனநிலையைக் கொடுக்கும். தனுமீனத்தோர்க்கு குருவின் பலன் பலம்குறைந்ததே. குரு செவ்வாயோடு சேர்ந்தாலன்றி யோகபுத்திகள் வரும்போது நற்பலன் உண்டு. குருவும் செவ்வாயும் சேர்ந்தால் அவர்களுடைய குணவேறுபாட்டினால் சாந்தமான பலன் ஏற்படாது.

மகரகும்பத்திற் பிரந்தோர்கள் தங்கள் சீவியம் குருதெசாபுத்திகளில் கேடாக நடந்ததோ நன்றாக நடந்ததோ என்பதிலும் சந்தேகப்படவேண்டிவரும். அடிக்கடி ஏற்படும் சிறு போலியோகங்களும் இடையிடையே நம்பிக்கையைக் கொடுக்கும். புத்திகளும் பாரிபுத்திரரின் அதிர்ஷ்டமில்லாதபோது மிகவும் சாரமற்றவையாகும். சாரமற்ற புத்திகளிலும் மனைவிமக்களின் யோகத்தால் விசேஷ பலன் உண்டாவதுண்டு. இது குருவில் மாத்திரமல்ல, மற்றைய தெசாபுத்திகளிலும் ஏற்படும். ஆனால், இவ்விதமான மனைவிமக்களின் யோகங்கள் பலமுறையும் ஒருவனை ஏமாற்றிவிடும். எப்படியெனில், எட்டு வருஷத்திற்குக் கஷ்டகாலம் உள்ள ஒருவனுக்கு மிக யோகமான பிள்ளை பிறந்திருக்கிறதென்று, அல்லது அவனது மனைவி யோகசாலி என்று ஒரு ஜோஸ்யன் சொல்லலாம். ஜாதகியும் நம்பியிருக்கலாம். ஆராய்ந்து பார்க்குமிடத்து, எட்டு வருஷம் கழிந்துதான் இவர்கள் யோகம் பலிக்குமென விளங்கும். இதனால் யாதும் ஏற்ற லாபம் உண்டாகாது. ஊண் உறக்கங்கள் மாத்திரம் குறைவில்லாமல் நடக்கும். முன் கூறியபடி வியாழன் கெட்டவனாயினும் முகமலர்ச்சியையும் கீர்த்தியையும் கெடுப்பதரிது. இராகுவில், இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் திருவிழா நடத்தியிருந்தால், குருவிலும் அசுபந்தான். இன்னும் இராகு யோககாரகனாக நடந்து, சனிக்கும் யோகம் ஏற்பட்டிருந்தால் நடுவில் இருக்கும் குருதெசையிலும் காலம் பழுதில்லாமல் கழிகிறது. ஒருவனுக்கு வியாழதெசை கெட்டதாயிருந்தாலும், அவனது யாத்திராசித்தி அனுபவங்களாலும், ஆகம ஆராய்ச்சிகளிற் கழிந்த காலத்தினாலாயினும், குருமாருக்குச் செய்த சரீரஉதவி, ஒத்துழைப்பு, தானதருமம், கௌரவமாக மதிக்கப்பெறல், ஆபத்துக் காலத்தில் பிராணத்தியாகத்திற்குத் தயாராக இருந்த நண்பரின் தொகை முதலியவற்றாலும் நான் அதிசயப்படுவதில்லை. குரு கழிந்து சனி ஆரம்பிக்கும் காலமானது திகிலின்றி இலகுவாகச் சென்றுவிட்டால் நான் அதிசயப்படுவதுண்டு. சனி ஆரம்பம் நன்மைக்குரியதானாலும் கலக்கத்தைக் கொடுக்கிறது. பலத்த ஜாதகர்களுக்குக்

குரு உபயோகமில்லாது கழிந்துவிட்டால், சனிதெசை ஆரம்பமும் வழமையான சுயபுத்தியின் தடங்கலின்றிப் பலனை ஆரம்பித்துவிடுகிறது. எப்படியும் சனியை எப்படிக் கழிப்பதென்று நாமே ஆராய்ச்சிசெய்வோம். சனியினுடைய பலனில்லாது கிராமக்கோடுகள், நகரசங்கங்கள், நகரபரிபாலனசங்கங்கள், சுகாதாரசபைகள், சட்டநிரூபண சட்டநிருவாக சபைகள், இராஜசபைகள், மகாசபைகள் ஏற்படமாட்டா. புதனின்றி வித்துவான்களும் சர்வகலாசாலைகளும் எப்படி இல்லாதுபோய்விடுமோ அதுபோலச் சனியின்றிச் சனத்தலைவர்களும் மகாசபைகளும் இருக்கமாட்டா. தற்காலத்து வியாழனும் வேண்டாம்; குருமார், கோவில்கள், பாதிரிமார், போதகர்கள், ஆகமசங்கங்கள் எல்லாம் வேண்டாமென்கின்றார்கள். நான்தானும் என் தந்தையார் பத்தில் குருவை விரும்பியதுபோல் பத்தில் சனியை விரும்புகின்றேன் அல்லவா? காலத்துக்குக் காலம் வேறல்லவா?

பூசம், அனுஷம், உத்தரட்டாதி.

சனிதெசை வரு 19.

புத்தி	வருஷம்	மாதம்	நாள்	மொத்தம் வருஷம்	மொத்தம் மாதம்	மொத்தம் நாள்
சனி	3	0	3	...	...	...
புதன்	2	8	9	5	8	12
கேது	1	1	9	6	9	21
சுக்கிரன்	3	2	0	9	11	21
சூரியன்	0	11	12	10	11	3
சந்திரன்	1	7	0	12	6	3
செவ்வாய்	1	1	9	13	7	12
இராகு	2	10	6	16	5	18
வியாழன்	2	6	12	19	0	0

சனிமகாதேசை பலன்.

பூசம், அனுஷம், உத்தராட்டாதி ஆகிய நக்ஷத்திரங்களில் ஜனனமானவர்களுக்குச் சனிதெசை ஆரம்பதெசையாகும். பெறுபேற்றைக் கருதாது நிஷ்காமியமாகக் கடமைசெய்வதில் விருப்புள்ளவர்களுக்கு இத்திசை மிகவும் ருசிகரமாகவும் மிகஉபயோகமாகவும் இருக்கும். யோகச் சனிதெசாபுத்திகளுள்ள ஒரு குழந்தை கிராமக்கோட்டு அங்கத்துவத்திலிருந்த பிதாவை மகாமந்திரசபைக்குக்கூடக் கிளப்பிவிடலாம். அரசர்தயவு, அரசர்நட்பு, ஆதரவு, ஜனச்மூகத்தலைமைவேலை, ஸ்தலத்தில் பெரியோராயினும் சிறியோராயினும் எதிர்வாக்கில்லாத தலைமை ஆகிய இவையெல்லாம் உண்டாம். ஓர் யோகமுள்ள மனைவி அதிர்ஷ்டங்குறைந்த தன் நாயகனோடு மேல்நோக்கிச் செல்லுதல் சிலவேளை அருமையாக இருந்தாலும், ஓர் யோகமுள்ள குழந்தை தன் பிதாவோடு உயர்நிலையடைதல் மிக இலகுவாகும்.

தென்னிந்தியாவிலுள்ள பண்டிதர்கள்தானும் பெண்பிரஜைகளை மதிப்பதில்லை. மகா யோகசாலிகளான பெண்குழந்தைகளை அசட்டைசெய்துவிட்டு, யோகமில்லாத புருஷக் குழந்தைகளின் ஜாதகத்தையே பரீக்ஷைசெய்யும்படி இரந்துநிற்கும் அனேக பிதாக்கள் இந்தியாவில் உண்டு. புருஷக் குழந்தைகள் தமது நண்பர்கள் நண்பர்களின் பிதாக்கள் முதலியோரோடு சேர்ந்து யோகத்தைப் பங்குபற்றுகிறார்கள். பெண்குழந்தைகள் நம் ஆசியாக்கண்ட நாகரீகப்படி அன்னியர் சேர்க்கை தவிர்க்கப்பட்டமையால் தம் பிதாமாதாக்களுக்கு யோகத்தைக் கொடுத்தே தாமும் அனுபவிக்கிறார்கள். யோகக்குழந்தைகளுந்தப் பிதாவும் மாதாவும் தத்துவக்காரர்போலுள்ளாராதலின் முழுயோக பலனுக்கும் உரித்தாவார்கள்.

இடபலக்கின பால்யன் தன்னுடைய அதிர்ஷ்டத்தைப் பாடசாலைவதப்பிலும் ஆட்டத்திலும் பேச்சிலும் கழித்துவிடலாம். சிறுமியோ குடும்ப உயர்ச்சிக்கும் மேன்மைக்கும் உபயோகித்து, எஞ்சியதைக் கல்வி முதலியவற்றில் கழிக்கிறாள். ஆதலால், ஓர் குடும்பத்தவர்களுக்கு எது செய்தல்வேண்டும்? எப்படிச் செய்தல்வேண்டும்? எப்போது செய்தல் வேண்டும்? என்பனவற்றைக் கூறமுன் பெண்பிரஜைகளின் ஜாதகத்தை நான் ஆராய்ச்சி செய்கிறேன். சிறுவர்களின் யோகத்திலும் பார்க்கச் சிறுமிகளின் யோகம் குடும்பஉயர்ச்சிக்கு இன்றியமையாததென்பதே என் அபிப்பிராயம். [உன்னதநிலையை யடைந்த ஒவ்வொருவனுக்கும் மூலகாரணமாக ஒரு மனைவி, புத்திரி அல்லது தாயே இருக்கின்றனள்.]

வயசேறியபின் சனிதெசையானது முன்பு யோகம் தடைப்பட்டிருந்தால் சுயபுத்தியிலேயே கொடுக்கவேண்டியதெல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறது. சாமானியச் சனிதெசையோ சுயபுத்தியில் யாதும் நன்மை செய்வதில்லை. சில வேளைகளில் நன்மையில் அதிகப்பட்ட தீமையைச் செய்கின்றதெனச் சொல்லி அனுகூலமடைந்திருக்கிறேன்.

மேடலக்கினத்திற் பிறந்தோர்க்குச் சனி அதிக நன்மையைச் செய்வதில்லை. மனைவிமக்களது யோகத்தை இது தடுப்பதுமில்லை. பொதுவாகச் சமபலன் உள்ளது. இக்காலத்தில் அன்னியர் யோகத்தாலேயே ஒருவன் பிரகாசிக்கிறான். இடபலக்கினத்தில் ஜனித்தவனையே சனிதெசைக்காலத்து யோகத்தை அனுபவிப்பவனென நான் மதிக்கின்றேன். அப்படிப்பட்டவனுக்கு ஜனனகாலத்துச் சனி பலம்பெற்றிருந்தாலும் பத்தாமிடத்தில் இருந்தாலும் மூன்றாறுபதினொன்றில் இருந்தாலும் அவனுக்கு அதிக விசேஷ யோகம் உண்டு. அவன் ஜனத்தலைவனாகவும் உதவி புரியவும் ஏவல் செய்யவும் ஆதரிக்கவும் பலர் சூழவும் நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்டவனுக்கு ஏற்படும் தலைமை இரங்காநெஞ்சுள்ள செல்வர்களாலாவது மனநிலையில்லாத போலிப்பெரியோர்களா

லாவது உண்டாவதல்ல. ஆனால், அவன் ஏவலில் தங்கள் பிராணனையும் விடக்கூடிய சாமானிய ஜனங்களின்மேல் ஏற்படும் தலைமையே மிதுன லக்கினத்திற் பிறந்தவனின் யோகக்ஷேமங்கள் மேடலக்கினத்திற் பிறந்தவர்களுக்குப் போல் அனேகமாக நடக்கும். கர்க்கடகலக்கினத்திற் பிறந்தோர்க்கு முதல் மூன்று புத்திகளும் நிஷ்பிரயோஜனமானாலும் சனி தெசையில் நஷ்டவாளிகளாவதில்லை. சிங்கலக்கினத்திற் பிறந்தோர்களின் நடப்புகளெல்லாம் கடகத்திற் பிறந்தோர்களைப் போலாயினும் சனி தெசை அந்திய பாகத்தில் விசேஷ பலனோடு கூடியதாகும்.

சிங்கலக்கினத்திற் பிறந்தோர்களின் செவ்வாய் இராகு வியாழ புத்திகள் முற்பாகத்தில் இழந்தனவற்றையுங் கொடுத்து, விசேஷ பலனையுஞ் செய்யும்.

கன்னிலக்கினத்திற் பிறந்தோர்க்குச் சனிதெசைப் பலன் இயல்பிலேயே மேடமிதுனகடகசிங்கத்தோரிலும் விசேஷமாக நடக்கவேண்டியதொன்றே.

துலாலக்கினத்திற் பிறந்தவர் இடபலக்கினம் நீங்கிய மற்ற எல்லா லக்கினத்தவர்களிலும் பார்க்க விசேஷ பலனைப் பெறுவர். ஆதலால், துலாலக்கினத்திற் பிறந்தவரின் பலன்கள் இடபலக்கினத்திற் பிறந்தவர்க்கு அடுத்துநிற்கிறது எனலாம். விருச்சிகலக்கினம் சிங்கலக்கினத்தைப் போன்ற அனுபவமுள்ளது. தனுலக்கினத்திற் பிறந்தவனுக்குப் புதன் நன்மை செய்வதுண்டு. இந்தப் புதன் சூரியனோடு சேர்ந்திருக்கில் மிக விசேஷமுண்டு. அப்படி இல்லையேல், புதன்புத்தியிற் கொடுத்ததைக் கேது கலைத்துவிடுவான்.

மகரகும்பமீனத்தில் ஜனித்தோர்க்கு யோகமானது சனிதெசையிலே சோதிடரின் வர்ணனையில்தான் நிற்கிறது. இதனால் ஒருவன் கெட்டுப்போவான் என்று நான் சொல்லவில்லை. அவனுடைய ஏற்றம் நத்தை ஊர்வதுபோல் மிக மெதுவானதும் முன்தெசையில் இவன் இருந்த நிலைக்குத் தக்கதாகவும் இருக்கும்.

ஒருவன் இடபலக்கினத்தில் அல்லது துலாலக்கினத்திற் பிறந்திருந்தால் நல்ல புதனும் அந்தர்க்கதனானால், ஜாதகரும் இக் காலத்தை உபயோகப்படுத்தக்கூடிய புத்திசாதுரியமுடையவராயின் இந்த 32 மாதங்களும் 9 நாட்களும் இவரது வருங்காலச் சீவியத்தை நிலைபெறு உள்ளதான யோகக்ஷேமங்களோடு கூடியதாக ஆக்கிவிட முடியும். மிதுனகன்னியில் பிறந்தோர்களுக்குச் சாரமில்லாத தெசையாக இருந்தாலும் சுக்கிரபுத்தி குணமாக நடக்கும். அவர்கள் கூடிய சுகத்தைக் கொடுக்கக்கூடியனவும் யோகமுள்ள சுக்கிரபுத்திகளையும் சாரமற்ற சனி தெசையையும் உடைய மகரகும்பங்களில் ஜனித்தோர்களிலும்பார்க்க விசேஷமான நன்னிலையுடையாராக இருக்கின்றனர்.

சனிதெசையில் செவ்வாய்புத்திகளில் பலவகையான கஷ்டங்களும் உண்டாகும். சனிதெசையில் இராகுபுத்தியில் அனேக சௌகரியமான மாற்றங்களை உண்டுபண்ணிக்கொள்ளலாம். சுக்கிரனும் சனியும் அந்தர்க்கதராகும்போது சாந்தியைக் கொடுப்பர். [சுக்கிரனும் சனியும் ஒன்றினுள் ஒன்று வரும்போது நன்மையோ தீமையோ அதிக பலத்தோடு செய்யும் என்று சாஸ்திரப் பிரமாணங்கள் உள்ளன.]

தனுமீனத்திற் பிறந்தோர்களுக்குச் சனிதெசைச் சுக்கிரபுத்திகள் விபரீதபலனைக் கொடுப்பனவாகும். இப்போது நாம் பிரசண்டசனியைக் கழித்து, சூதும் தந்திரமும் அமைதியும் உள்ள செட்டியார்—புதன் தெசையை ஆராய்வாம்.

ஆயிலியம், கேட்டை, ரேவதி.

புதன்மகாதெசை ௵ 17.

புத்தி	வருஷம்	மாதம்	நாள்	மொத்தம் வருஷம்	மொத்தம் மாதம்	மொத்தம் நாள்
புதன்	2	4	27	...	...	...
கேது	0	11	27	3	4	24
சுக்கிரன்	2	10	0	6	2	24
சூரியன்	0	10	6	7	1	0
சந்திரன்	1	5	0	8	6	0
செவ்வாய்	0	11	27	9	5	27
இராகு	2	6	18	12	0	15
வியாழன்	2	3	6	14	3	21
சனி	2	8	9	17	0	0

புதன்மகாதேசை பலன்.

ஆயிலியம், கேட்டை, ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களொன்றில் ஜனனமானவர்களுக்குப் புதன்தெசை முதலாவது தெசையாக ஏற்படும். இருப்பு, நக்ஷத்திர நாழிகைகளைப் பொறுத்ததேயாம்.

கல்வி, அறிவு, புத்திவிருத்திக்குரிய கிரகமாதலின், புதன்தெசையிலேயே பிள்ளை பிறப்பது மிக விசேஷம். சனி இராகு செவ்வாய் காலங்களில் ஒரு மனிதன் ஏராளமாக சம்பாதித்து, அதிலும் அதிகமாகச் செலவு செய்து, டம்பமாகச் சீவியத்தை நடத்திவிட்டு, சிலவேளை கவனமான மனிதனாக இருந்தால் கைமுதல் இல்லாதவனாகவும் இருக்கலாம்.

புதன்தெசையிலே வெளிப்பார்வைக்குச் சம்பாதிக்காதவன்போலிருந்து கொடுக்கவேண்டியவற்றையும் கவனமாகக் கொடுத்து, மீதமும் வைத்துக்கொள்ளுகிறான். ஆதலால்தான் சூதுக்கிரகம் என்றும், செட்டி என்றும், யூதன் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். எனக்குப் பொதுவாக நல்ல புதன்தெசையோடிருப்பவர்களோடு சகவாசஞ்செய்ய

எப்போதும் பயந்தான். ஆனல், புதன்தெசைக்காரர்களாயிற்றே, புதன் பண்டிதனல்லவா? ஆதலால், அவர்கள் சாஸ்திரத் திறமைக்கு அல்லது பாண்டித்தியத்திற்கு அஞ்சக்கூடிய கோழைநெஞ்சன் என்று நினைக்க வேண்டாம். ஆனல், அவர்கள் பணவிருப்பும் அவர்களது லோபக்குணமும் சிலவேளை அருவருப்பைக் கொடுக்கும். ஓர் எஜமானன் அவன் மனைவி அல்லது குழந்தைகளில் ஒன்றுக்குச் சூரியனும் செவ்வாயும் புதனும் சமீபித்திருந்தால், அல்லது ஒன்றுசேர்ந்திருந்தால் அவர்களோடு நான் சேர்வதே இல்லை. ஏனென்றல், அவர் பசியிருக்கும் தாய்க்கும் ஒரு சதமும் கொடுக்கமாட்டார். பேருக்கும் புகழுக்கும் சுயநலத்திற்கும் சில வேளை இன்றியமையாதாயின் அணுவளவு ஈயக்கூடும். தயாள இருதயமுள்ள பரோபகாரியாய் உள்ளதெல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, இன்னும் முடியுமானல் கொஞ்சம் அதிகங் கொடுக்கக்கூடியவன் புதன் ஆறு எட்டு பன்னிரண்டில் இருக்கப் பிறக்கிறன். அப்படிப்பட்ட ஒருவன் என் சமீபத்தில் அகப்பட்டால் என் விருப்புகள் எல்லாம் நிறைவேறிவிட்டனபோல நான் மதித்துக்கொள்ளுகிறேன். முற்பாகங்களை வாசித்தவர்கள் கடகசிங்கலக்கினத்திற் பிறந்தோர்க்குப் புதனல் வரும் கேடுதிகளை அறிந்திருப்பார்கள். ஆயினும், புதன் ஜாதகத்திற் கெட்டுப்போனல், தெசைகாலத்தில் நன்மையைச் செய்வான். ஜாதகத்திற்குக் கெட்டவன் தானே என்றலும், கெட்டுப்போனல் யோகத்தைக் கொடுப்பான் அல்லவா? பல வருஷங்களாக நான் கேட்டறிந்த ஓர் பிரபுவை மலாய்நாட்டிற் பார்த்தேன். பத்திராதிபர் ஸ்றெட் அவர்களின் அபிப்பிராயப்படி ஒருவனுடைய நோயை ஆராய்ச்சி செய்வதற்குக் கொஞ்சநேரம் போதுமல்லவா? ஓர் வைத்தியன் கூடப்பிறந்து வளர்ந்திருக்கவேண்டும். அதுபோல அவரை மதிப்பதற்கு எனக்குக் கொஞ்சநேரம் போதுமாயிருந்தது. அவரால் அவரைச் சுவீகரித்த நாடு மாத்திரமல்ல; தாய்நாடும் அதிகம் காத்திருக்கின்றதல்லவா? சோதிடம் என்னும் சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்டவனுக்குச் சிங்கலக்கினத்திற் பிறந்து, ஆறில் புதன்பெற்றவனில் என் விசேஷ அபிமானம் இருக்கக் கூடாது. ஓர் இலக்கினத்திற்குச் சுபர்கள் உயர்வுபெற்றல் அச் சாதகிக்கு நன்மை செய்வதுபோல, நாம் முன் கூறியபடி கேடானவரும் கெட்டுப்போனல் யோகம் செய்யவேண்டியவரே.

இலங்கை அரசாட்சியாரின் சேவில் உத்தியோகத்திலிருந்த ஒருவரையும், அவருக்கு அடுத்தபடியாக இருந்த இருவரையும் அவர்களின் ஜாதகங்களையும் நான் பூரணமாக அறிவேன். அவர்களெல்லாம் ஜாதி ஜனசூலகோத்திர பேதமின்றிப் பரோபகாரிகளாக இருந்தவர்கள். தற்காலத்து இலங்கை அரசாட்சியாரின்கீழ் பேனை பிடிப்பவர்களுள் அநேகர் தாங்கள் இருக்கும் நன்னிலைக்கு இந்த ஆறில் புதனுள்ள பரோபகாரிகளுக்குத் தாம் கடமைப்பட்டிருப்பதாகக் கூறுவார்கள்.

புதன் மேஷம் கடகம் சிம்மம் விருச்சிகத்திருந்தால் தாமாக நன்மை செய்வதில்லை.

சீவிய ஆரம்ப காலத்தில் புதன்தெசை நடப்பது விசேஷம்; அந்திய காலத்துப் புதன் நடப்பது அதிலும் விசேஷம். யாழ்ப்பாணத்தில் பிரபல நீதிபதியாக விருந்த வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்கள், (கனம் நியாயதுரந்தரர் பாலசிங்கம் அவர்களின் பிதா) சூரியதெசையில் பிறந்தார். பாரிய குடும்பத்திற் பிறந்தமையால் பால்ய காலத்தில் சந்திரதெசையில் பல அனுபவங்களோடு கூடியவரானர். பரீக்ஷைகளிற் சித்தியும் கல்வியிற் போட்டியும் செவ்வாய்தெசை கொடுத்தது. இராகுதெசையில் பிரபல நியாயதுரந்தரரானர். குருதெசையில் நீதியாசனத்தில் பிரபல்யமேற்பட்டது. சனிதெசையில் சாஸ்திர பாஷா ஆராய்வுகள் செய்தார். புதன்தெசையில் தமிழர்கள் மாத்திரமல்ல, ஙேழைத்தேசத்தவர்களும் பெருமைப்படக்கூடிய அகராதி போன்ற சர்வதரிசன சங்கிரகம் ஒன்றை ஆராய்ந்து இயற்றினர். இவையெல்லாம் துலாலக்கின ஜாதகத்தையுடைய இப் பிரபுவின் பேறுகள்.

அந்தியகாலத்தில் புதன்தெசை பெறுபவர் கல்விவிருத்திக்கும் சமய சாஸ்திர விருத்திக்கும் உழைக்கிறர்கள். நியாயப்பிரமாண நூல்களை எழுதியோர், வேதாந்தசித்தாந்த நூல்களை உயர்தர உத்தியோகத்திலிருந்து இளைப்பாறி ஆராய்ச்சிசெய்து எழுதியவர் அநேகர் புதனை அந்தியகாலத்தில் பெற்றவர்கள். ஆத்மசக்தியை எழுப்புவதற்கும் இது விசேஷமான காலம். நடுவயசில் ஒருவன் சாந்தமாகவும், அமைதியாகவும், ஒரே வழிப்பட்ட மனதுடையவனகவும், பிறர் அறியாது ஏராளமான பொருளைத் தேடுகிறன். பணஆசை, பாரியகுடும்பம், தருமவிஷயப் பொறுப்புகள் என்பவை இல்லாவிடில் ஒருவன் பலமுறையும் சாத்வீகமான சாஸ்திரப்பிரமாணங்களைப் பின்பற்றி, லௌகீக விஷயங்களில் சோம்பலடைகிறன். ஒருவன் செல்வத்தை இக்காலத்து அசட்டை செய்துகொண்டுவரச் செல்வமும் அவனையே அடைகின்றது.

புதன்தெசையிற் புதன்புத்தி ஆரம்பத்திலேயே நன்மையைச் செய்கிறது. இதற்கு நியாயம் முன் கழிந்த சனிதெசையின் அந்தியபுத்திகாரகன குருவுக்கும் புதனுக்கும் சுபாவத்தில் பேதமில்லாதிருப்பதே. இடபதுலாத்தில் பிறந்தவர்களது சனிதெசை யோகமுள்ளதுபோல் புதன்தெசையும் குறைவில்லாத மகாயோகம் கொடுப்பதாகும். சனிதெசையில் அந்தியபுத்தியான குருவின் பாகம் இடபதுலாத்துக்கு நாசத்தைக் கொடுக்கக்கூடியதானலும், கஷ்டகாலங்களில் அடங்கிநடக்கக் கற்றுக்கொண்டவன் அஞ்சவேண்டியதில்லை. சனிகுரவர்களின் ஒற்றுமையில்லாத குணங்களைப் பற்றி ஆலோசிக்கவேண்டியதுமில்லை. ஏனெனில், தெசையும் புத்தியும் ஒருமிக்கக் கேடாக இருப்பதிலும் பார்க்கப் புத்தி மாத்திரம் அசுபமாக இருப்பது குறைந்ததீமையுடையதே.

சனியும் புதனும் ஒன்றிலொன்று அந்தர்கதமாகும்போது முன்னர் கூறப்பட்டபடியே மகாயோகத்தைச் செய்யக்கூடியனவாம். குதிரைப்பந்

த்யம், சீட்டுகளில் இக்காலத்து வெற்றிகிடைக்கக்கூடுமெனக் கூறும் சோதிடர்களை நான் குற்றஞ் சொல்வதில்லை.

சில வருஷங்களின் முன் காலிப் பந்தயத்தில் ஏராளமான பொருளைச் சனிதெசை புதன்புத்தியில் பெற்றவர் ஓர் பெரிய வியாபாரியின் கையாளான ஓர் துலாலக்கின ஜாதகியே. இப்போது அவரும் ஓர் பாரிய முதலாளியாக இருக்கிறார். ஜாதகத்தைக் கவனிக்கும்போது இந்தப் பேறுதானும் பெரிதல்ல.

புதன்தெசையில் கேதுபுத்தியில் தப்பித்துக்கொள்ளவேண்டுமானால் ஜாதகத்தின் பலமும் கேதுவின் வலுவும் வேண்டும்.

புதன்தெசையில் சுக்கிரபுத்தி ஏற்படும்போது பலவகையான சாந்திகளும் ஆற்றல்களும் ஜாதகிக்கு உண்டாகின்றன. என் நீண்டகாலப் பிரயாணங்களில் நான் பாரிய ஹோற்றல் சொந்தக்காரர், நடப்பிப்பவர், வேலையாட்கள், ஆகாரபானாதிகளில் தொழில் நடத்துபவர், காய்கறி மருந்துமூலிகைகள் மருந்துசேர்ந்த பானங்கள் முதலியவற்றில் தொழில் நடத்துபவர்களைப் பார்த்திருக்கிறேன். புதசுக்கிரர்கள் அந்தர்கதராகும்போது இவ்வகையில் பலர் சுபநயமடைந்தார்கள்.

ஆகாரவஸ்துக்கள், பானங்கள், களிப்பைக் கொடுக்கும் வஸ்துக்கள் இவைகளைப்பற்றிய தொழில்கள் இவ்வகைக் காலங்களில் தொடங்கப்பட்டாலும், கொண்டுநடத்தப்பட்டாலும் லாபத்தைக் கொடுக்கின்றன. சந்திரன் சுக்கிரன் புதன் ஆகிய இக்கிரகங்கள் ஒன்றியொன்று அந்தர்கதமாகும்போது ஒருவனைத் தாரித்திரியஸ்திதியில் இருந்தும் தனாதிபத்தியத்தை அடையச் செய்யும். ஐரோப்பிய உத்தியோகஸ்தரின் கீழ் சிற்றேவல்களில் அமைந்திருந்த வேலையாட்கள எஜமானர் ஊருக்குப் போகும்போது தமக்காகக் கழித்துவிடப்பட்ட கட்டில், கவுச்சி, தளபாடங்கள், பீங்கான், கோப்பைகளைக் கொண்டு சனசஞ்சாரமில்லாத ஒதுக்குகளில் போசனசாலைகளையும் கடைகளையும் உண்டுபண்ணி, உருக்குலைந்த மோட்டோர்ரதங்களோடும் அந்த ஸ்தானங்களையும் பட்டினங்களாக்கி, தாமும் டட்டவர்த்தனர்களாகியதையும் நான் பார்த்திருக்கிறேன். கிரகங்கள் சாமானிய ஜனங்களுக்கு இவ்வளவு உயர்ச்சியைக் கொடுத்தால் முன்னரே நன்னிலையிலுள்ளவர்களுக்கு எவ்வளவு உயர்ச்சியைக் கொடுக்கவேண்டும்! இக்காலங்களில் றெஸ்ற்ஹௌஸ் முதலிய இடங்களில் தொழில் நடத்துவோர், பிறக்கும்போது சனிதெசையின் யோகமுடையவர்களாயின் அரசாட்சியாரால் கௌரவமும் பெற்றிருக்கிறார்கள். புதன்தெசையில் சூரியபுத்தி மேடசிங்கதனுவில் பிறந்தவர்களுக்கு நன்மையைச் செய்தது. செவ்வாய் மகரகும்பத்திற் பிறந்தோர்க்கு மட்டான பலனையும், கடகசிங்கத்திற் பிறந்தோர்க்குச் சாமானியமான சுபங்களையும், சந்திரன் மீனவிருச்சிகத்திற் பிறந்தோர்க்கு விசேஷ சுபங்களையும் புதனில் அந்தர்கதாகும்போது செய்திருக்கின்றன. இந்நூலின் முற்பாகங்களை வாசித்தவர்களுக்கு இராகுவும் புதனும் அந்தர்கதமானால் எனக்கு இருக்கும் வெறுப்பு தெரிந்திருக்கலாம். குருசனிபுத்திகளின் பலன்கள் முற்பாகங்களை வாசித்தவர்களுக்கு அநுமானத்தால் தெரியலாம். புதன்தெசை முடிவது சனிபுத்தியோடாதலின் கடகசிங்கத்திற் பிறந்தோரே மிகக் கஷ்டமடைவர்.

இலக்கின பலன்.

முன் வாக்குப்பண்ணியபடி 12 இலக்கினங்களின் பலன்களையும் இப்போது நாம் விளக்குவோம். அப்படியே மீனத்திலிருந்து ஆரம்பிப்போமாக.

மீனத்தின் சின்னம் இரண்டு மீன்கள் கொண்டது. ஒன்றின் வால்பக்கத்தில் மற்றதன் தலை இருப்பது. மறுபிறப்பு முதலிய விஷயங்களில் தங்களை நான் நம்பிக்கைவைக்கும்படி வற்புறுத்தவில்லை. ஆயினும் "மேலேற்றம்", சிறிது மிகச்சிறியதாதல், பெரிது வளர்ச்சியடைந்தேபோதல் என்பது முதலிய அபிப்பிராயங்களைத் தாங்கள் கைக்கொள்ளாவிடில் நான் சில விஷயங்களைக் கூறுபவனாகவும் தாங்கள் அவற்றைக் கேட்டறிபவர்களாகவும் ஒற்றுமைப்பட முடியாது.

சுருங்கக் கூறுவதானால், மீனலக்கினத்தில் ஜனித்தோன் மேற்படியில் உள்ள மனிதன். பல விஷயங்களிலும் அனுபவமடைந்தவன். பலரையும் வசியஞ்செய்யக்கூடியவன். அவன் குருஸ்தானத்தை அடையப் பிறந்தவன். விசேஷமான கதைகளை எழுதிய கர்த்தாக்களும், உயர்தர உபந்நியாசகர்களும், சித்தியுள்ள இராச்சியதந்திரிகளும், இராச்சிய மந்திரிகளும் மீனலக்கினத்திற் பிறந்தவர்களே. இவர்களுக்குச் சிறு குறைகளும் உண்டு. இவர்கள் தமது தவறுகளை அங்கீகரிக்கமாட்டார்கள். எனக்கு ஓர் பெரியாரைத் தெரியும். சிறுவன்றானும் அவருடைய தவறுகளை உணரக்கூடிய சமயத்தும், "அப்பா! நீ நான் சொல்வதை அங்கீகரிக்கின்றாயில்லை, அதுவிஷயத்தில் நான் துக்கமடைகிறேன். நீ போய் நாளை வந்து உன் தவறை ஒப்புக்கொண்டு என் உண்மையை அங்கீகரிப்பாய்" என வெருட்டிவிடுவார். இவர்கள் சாதாரணமாகத் தம்மை வியக்கக்கூடியவர் திருப்திகொள்ளக்கூடிய விஷயங்களைத்தான் கூறுவதுண்டு.

இதற்கு முன்படி கும்பம். தண்ணீர்க்குடம் அல்லது பூரணகும்பம் எனக் கூறுவதுண்டு. இவைதான் கும்பச் சின்னங்கள். கும்பலக்கினத்தில் ஜனித்தவன் மிக நிர்ப்பந்தமான வேளைகளிலும் ஆனந்தமாக இருப்பான்.

இவன் நன்றாகச் சாப்பிடக்கூடியவன். பின்வருவதைக் கருதான். தவறுதல் உண்டாக உண்டாக இவனும் உறுதி அடையக்கூடிய சக்தி இவனுக்குண்டு. (இது மிக அருமை.) இவனுக்குப் பலராலும் தீங்கு எற்படுவதுண்டு. இவனுடைய விசேஷங்கள் கவனிக்கப்படாதுபோய்விடுவதுண்டு. சுக்கிரதெசை தகுந்த காலத்து வந்தாலொழிய இவனது சீவியம் வீணாகிவிடுவதுண்டு. இது சனிக்குரிய இலக்கினம். சாணேற முழம் சறுக்குவதுண்டு. பொருமையால் பந்துக்களோடு சண்டையிட்டுக்கொள்வதும் பிதா மாதா மனைவிமக்களைத் தூஷிப்பதும் சனி இரண்டுபன்னிரண்டிலிருக்கப்பெற்றவனுக்குண்டு. அதிகபோசனஞ் செய்வதால் வயிற்றுநோயே இவனுக்கு மந்தபுத்தியையும் இறுதியையும் கொடுக்கும்.

இதற்கு முந்திய படியான மகரலக்கினமும் சனிக்குரியதே. இதன் சின்னம் கடலாடு அல்லது முதலை. இவ்விலக்கினத்திற் பிறந்தவனை உன் பிரயத்தனங்கள் வருத்தமாட்டா. கஷ்டகாலத்தில் இவனைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். மேலே கூறிய கும்பலக்கினமுடையவன் அப்படியல்ல. உன் அபிப்பிராயங்களை இவன் சட்டைசெய்வதில்லை. இவனுக்கும் சுக்கிரதெசை வாராதபோது சாத்திருந்தே பேறுகளை அடையாது காலங்கழிக்கிறான்.

தனுலக்கினத்திற் பிறந்தோனைக் குறித்து என்ன சொல்வது? இவன் பிறவியிலே தலைவன். எப்போதும் அக்கிராசனம் பெறுபவன். அசைவில்லாதவன். அமைதியுடையவன். தவறாத குறிமதிப்புகள் உள்ளவன். சிறந்த வீரன். கலங்காத சனநாயகன். தப்பறிவதிற் சாமர்த்தியமுள்ளவன். பிறரை அடக்கும் முறையை அறிந்தவன். இவனுக்கும் ஒரு குறை உண்டு. சாதி, ஆசாரம் என்னும் சட்டுப்பாட்டைத் தாமே உண்டுபண்ணிப் பிரிவிற் பிரிவை ஆக்கிக்கொண்டு, சமாதானமும் ஊணுமற்றுத் தாமே கெட்டுப்போபவர்போல் சத்தியம், நேர்மை என்னும் கடுமையான லௌகீகமற்ற சங்கற்பங்களைச் செய்துகொண்டு இவன் கஷ்டமடைவான். தலைவன் பெற்றால் பரிசாகும். கையாள் எற்றால் கைக்கூலியாகும். இடையிலுள்ள தனுலக்கினத்தோனே! நீ என் கீழ்—மேல் ஆட்களை வருத்துகிறாய்? சொற்பம் கைலஞ்சம் எற்றாலென்ன? உலகத்திலிருக்கும்போது லௌகீகமாக நடக்கலாகாதா? தனுலக்கினத்தோர்க்குப் புதாவியோகம் மிக உயர்நிலையைக் கொடுக்கும்.

விருச்சிகலக்கினத்தோன் எவ்வகையானவன்? அவன் ஒரு போக்கிரி, அல்லது மகரிஷி. ஆகமங்களைத் திருத்த அல்லது சிறைச்சாலைகளை உடைக்கப் பிறந்தவன். கடைசிவரை இவ்வகைப் போக்கிலேயே அவன் இருந்து கழிவான். பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைகளோடும் போட்டிபோட்டு வயசேற எற அதிக போகியாவான். பிரமாணங்களில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. தன் அனுபவமே போக்கு. சேட்பவன்போல் கண்களை மூடிச் செவிகொடுத்துக்கொண்டிருந்து தான் நினைத்ததையே

செய்வான். எதோ ஓர்வகையாகத் தானே பெரிதாகப் பார்ப்பவன். ஒட்டைப்பானையை விற்றுத் தன்னிடத்தில் மாத்திரம் ஒட்டைப்பானை உண்டென வியந்துகொள்வான். இராகுதெசை காலத்து இவன் சண்டப்பிரசண்டனாவான். இவனுக்கு உதயத்துக்கும் சத்துருத்தானத்துக்கும் செவ்வாய் அதிபதியாதலின், இவனது சத்துருக்கள் செழிப்படையமாட்டார்கள். உரிய காலத்திலே இவனுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. கஷ்டப்பட்டபின் காலாந்தரப் பேறுகள் உண்டு. விருச்சிகலக்கினத்தோன் இல்லாமல் மற்றையோர் சாலந்தள்ள முடியாது. இவனிலும் ஓர் குறை உண்டு அது மட்டில்லா அவாவே!

துலாலக்கினத்திற் பிறந்த தீங்கற்ற ஒருவன் நேர்மையான நீதிபதி, அல்லது தருமவர்த்தகன். கற்காமலே நியாயப்பிரமாண அறிவுடையவன். அனுபவமில்லாமலும் தொழில்நடத்தக்கூடியவன். யோக்கியமான நடை அவனுக்குப் பிறப்பிலே எற்பட்ட உரிமையாயது. அவன் ஒரு சாது. உயர்தரப்படியிலேறும் ஆன்மா. லௌகீக அனுபவத்தை முடித்துச் சாத்வீக ஆரம்பத்தோடு கூடியவன். இனிமையான சங்கீதம், உயர்தரக் கலாபோக்கு, லட்சணம், நாகரீகம் இவைகளெல்லாம் அவனிடத்தில் அமைவன. அவன் பலன் கருதாதவனாதலால், அவன் உதவிசெய்யப் பிரயத்தனப்படும்போது அவனில் மாறான விளக்கம் கொள்வது தவறு. எனெனில், அவன் நிஷ்காமியச் செய்கை உள்ளவன்.

கன்னியாலக்கினத்தில் ஜனித்தவன் மேன்மையான குணமுள்ளவன். அன்புடையவன். நன்னடையுடையவன். அவன் சில காலங்களில் ஏழைநெஞ்சையுடையவன். அவன் ஒருவருக்கும் தீங்கு செய்யமாட்டான். இலங்கையரில் பாரிய ஓர் பிரபு ஸேர் அம்பலவாணர் கனகசபை அவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் கன்னிலக்கினத்திற் பிறந்தவர். அவருக்குச் சிறந்த நட்புடையார் அறுவர் சேர்ந்தும் ஓர் அற்பமனுஷனுக்குத்தானும் தீங்கு விளைக்கக்கூடிய ஒரு விஷயத்தைச் செய்யும்படி அவரைத் தூண்டிவிட முடியாது. கன்னிலக்கினத்தில் ஜனித்தோர் குறுக்கெழுத்துக்கணிதம் முதலிய வர்த்தகக் கல்வியில் சமர்த்தர். தத்துவசாஸ்திரம் அவர்களுக்குச் சவர்ச்சியைக் கொடுப்பது. அவர்களின் நற்குணமேலீட்டினால் மற்றையோரில் இருக்கும் குறையையும் பார்க்கச் சக்தியற்றவராகிறார்கள்.

சிங்கலக்கினத்தில் பிறந்தவனது குறிகளைச் சொல்ல ஜோஸ்யன் வேண்டியதில்லை. அவன் பிறவியிலே தலைவன். மற்றையோர் அபிப்பிராயங்களை அசட்டையாகப் பார்ப்பவன். காரணமின்றி யாரையும் நேசிப்பவன். சாமானிய ஜனங்களில் இரக்கமுள்ளவன். அனுபவசக்தி உள்ளவன். துறவிலும் ஆழ்ந்தவன். கஷ்டகாலங்களிலும் செழித்த நடையுள்ளவன். பெருந்தன்மையுள்ளவன். பெருமைவாய்ந்தவன். கிறீஸ்து

நாதர் சிங்கலக்கினத்திற் பிறந்ததாக வதந்தி. மகாத்மா காந்தியடிகள் சிங்கலக்கினத்திற் பிறந்தவர். (தற்கால இலங்கை இராஜாங்கசபைத் தலைவர்—ஸ்பீக்கர் ஸ்ரீமான் W. துரைசுவாமி அவர்கள் சிங்கலக்கினத்திற் பிறந்தவர்.) யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது லக்கினமுமதுவே. சிங்கலக்கினத்திற் பிறந்தோர்க்குத் தமக்காக ஒன்றும் வேண்டியதில்லை. சிங்கலக்கினமுடையவர் கிரமத்தை நிலைநாட்டுபவர். அவர்களுக்குள்ள குறைவோ நிறைவோ தெரியாது, மிக விருத்தியடைந்த குணம் ஒன்று—ஆராய்வுசெய்யாது யார்மேலும் அன்புவைத்தல். சிங்கலக்கின ஸ்திரீகள் மிக விசேஷமுடையவர்கள். அவர்கள் மனுஷர்களுக்கு எற்றவர்களல்ல; தேவர்களுக்குரியவர். சிங்கலக்கின புருஷனும் சிங்கலக்கின ஸ்திரீயும் சேர்ந்தால் அபூர்வமான குணவிசேஷமாம்.

எகிப்திய நண்டு, பொறுப்பை வெறுப்பது, பாரம் எற்பட்டால் பின்புறமாகச் செல்வது ஆயினும், பூரணபிடிவாதமுள்ளது கர்க்கடகம். இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் எற்பட்டதும் பாலகங்காதர திலகர் ஜனித்ததும் கர்க்கடகலக்கினம். இவர்களெல்லாம் மனுஷஜாதியாரில் தயையுடையவர். கஷ்டப்படும் ஜனங்களுக்கு அன்னை போன்றவர். இவர்கள் சிலவேளை யோக்கியதையற்றவரிடத்தும் அன்புவைத்துக் கஷ்டமடைவர். கடகசிங்கலக்கினத்திற் பிறந்தவர் செவ்வாய்தெசையில் முதன்மைவகித்துக் குருதெசையில் தலைமை வகிக்கிறார்கள். மனுஷர்கள் தாயாரின்றி என்செய்வார்கள்?

இனி, மிதுனம். இவ்விரட்டை இராசியில் ஜனித்தோர் கவனமுள்ளவர். எச்சரிக்கையாக நடப்பவர். வரையறையுள்ளவர். கல்விப்பிரியர். சிங்கலக்கினமன்றி வேறுலக்கினத்திற் கலையார். எழுத்திலும் பத்திரிகாசிரியத்துவத்திலும் சமர்த்துடையவர். அவர்கள் போககாமிகள். எப்போதும் பதிசமேதவிருப்புடையவர். சொல்லி நடப்பிக்கப்படவேண்டிய காரியங்களில் உபயோகமுடையவர். அனுகூலமுள்ள வைத்தியர், சில சாஸ்திரசமர்த்தர், சத்திரவைத்தியர் முதலியோர் மிதுனலக்கினத்திற் பிறந்தோராவர். எப்படியும் இவருக்குச் சாஸ்திரவிஷயத்தில் மூளை உண்டு.

இராஜயோக இடபலக்கினத்தில் ஜனித்தோன் எவ்வகைப்பட்டவன்? தாழ்ந்த ஸ்திதியில் பிறந்தாலும் அவன் யோகமுள்ளவனே. பௌஷூம் சுகங்களும் அன்புடையோரும் இவனுக்கு ஓர்போதும் குறைவதில்லை இந்த லக்கினம் சுக்கிரனுக்குரியது. இச்சாதகனுக்குப் போகபோக்கிய விருப்பு அதிகமாக உண்டு. ஆயினும் மானத்துக்காக மட்டுப்படுத்திக்கொள்வான். இது ஓர் இருணஇராசி. தனராசிகளுக்கு மிகவும் உபயோகமானது. நயசுகம் பேர் கீர்த்திகளை இன்னொருவன் அனுபவிக்கவும், தான் அவனுக்காக வேலைசெய்ய அஞ்சுவதில்லை. கர்ம பாக்கியங்களுக்கு அதிபதி ஓர்கிரகமாதலால் எப்போதும் இப்படிப்பட்ட

வர்களின் தொழில் சுபத்தைக் கொடுக்கும். இவர்கள் வேண்டியனவற்றை எவ்வகை, எவ்விடம் பெறுவதென்பதைத் தனசக்தியுள்ளவர்கள் காட்டிக்கொடுத்தல்வேண்டும். நம்மவர் கணிதப்படி விக்ரோறியா மகாராணி இடபலக்கினத்தில் ஜனித்தார். இவர்களுக்குச் சனிதெசை மகாயோகம் கொடுப்பது. (புதனும் விசேஷபலன் கொடுப்பதே.) ஸ்திரீகளுக்கு இடபலக்கின ஜனனம் பல நயசுகங்களைக் கொடுப்பதே.

என் விருப்பப்படி நான் விடப்பட்டால், மேடலக்கின நூதன பிறப்பைப்பற்றி நான் மௌனஞ்சாதித்துவிடுவேன். மேடவிருச்சிகமீன லக்கினங்களிற் பிறந்தோர்களோடு எனக்குச் சகவாசஞ்செய்வதும் வெறுப்பே. அனேகமாக மீனலக்கினத்திற் பிறந்தோன், நீ ஒரு விசேஷ விருதுபெற்றவனாக இருக்கவும், தான் அவ்விஷயத்தில் அறியாமையுள்ளவனாக இருந்து உனக்குப் போதிக்கத் துணிவான். அவன் தன் புத்திசாதுரியத்தையே விசேஷமாக மதித்துக்கொள்வதுண்டு. ஆயின், தன் அபிப்பிராயத்தை 'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல' மிருதுவாகத்தான் செலுத்துவதுண்டு. முரட்டுவிருச்சிக லக்கினத்திற் பிறந்தோன் தன் அபிப்பிராயங்களில் பூரணநம்பிக்கையுள்ளவன். அனுபவங்களே அவனுக்குப் பெரியன. இவ்வகையான அனுபவங்கள் பலமுறையும் ஒற்றைப்போக்கானவையாகவும் இருக்கலாம். இந்தப் பாலநாகரீகம் பொருந்திய மேடலக்கினத்திற் பிறந்தோன் அறிவும் அனுபவமும் இன்றியும், அந்நியர் தன் அபிப்பிராயத்தையே பின்பற்றவேண்டுமென்றும், தன்னுடனே ஒத்துழைக்கவேண்டுமென்றும் காத்திருக்கிறான். தானே எப்போதும் சரியானதைச் செய்பவனென்றும், மற்றவர்கள் எல்லோரும் தவறானவர்களென்றும், உலகம் முழுவதும் தன்னோடும் தனக்காகவும் சுழலவேண்டுமென்றும் காத்திருக்கிறான். ஜோஸ்யன் பலரிலும் குணங்கண்டு சொல்லத்தான்வேண்டும். அல்லது பன்னிருவரில் ஒரு பகுதியார் நம் புஸ்தகத்தைப் பார்க்கமாட்டார்கள். ஆம், எற்கனவே முகவுரையில் கூறியபடி மேடலக்கினத்திற் பிறந்தோன் தைரியசாலி. பெருமையுள்ளவன். பயமற்றவன். அவனை இன்னொருவர் வழிகாட்டி நடத்த முடியாது. தனக்கு அனுவமில்லாத வழிகளிலும் அவன் தலைமை வகிக்க விரும்புகிறான். அவன் முரட்டுப்பிடிவாதமுள்ளவன். அவன் தவறுகளை அவனுக்குத் தெரியச்செய்ய அதிக காலம் எடுக்கிறது. நீதிமுறைகளையும் நியாயவழிகளையும் பரிசோதிப்பது இவனுக்கு விருப்பம். கோபம் மூண்டால் மிகக் கொடியவன். இவனுக்குப் பெருத்தகுறை 'ஆடுதின்னாப் பாலையிலும் அந்திக்கு ஓர் கடி கடிப்பதே.' இவ்விலக்கினத்திற் பிறந்தோர் அநேகர் வீணர்கள். ஆபாரணாதிகளில் விருப்புள்ளவர். மேடலக்கினத்திற் பிறந்த ஸ்திரீ பொன், இரத்தினாதிகளில் மகிழ்பவள். ஸ்திரீயாயிருந்தாலும் புருஷனாயிருந்தாலும் மேடலக்கினகாரர் தெரியாதென்று சொல்லும் விஷயம் ஒன்றுமில்லை. இதுவே நான் அறிந்த இலக்கின பலன்.

திரிகோண (ஓர்வகைப்பட்ட) இராசிகள்.

மேடம் —	சிங்கம் —	தனு
இடபம் —	கன்னி —	மகரம்
மிதுனம் —	துலாம் —	கும்பம்
கர்க்கடகம் —	விருச்சிகம் —	மீனம்

இராசிகளின் பேயர்.

மீனம்	மேடம்	இடபம்	மிதுனம்
கும்பம்			சர்க்கடகம்
மகரம்			சிங்கம்
தனு	விருச்சிகம்	துலாம்	சன்னி

ஆட்சிவீடுகள்.

குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்
சனி			சந்திரன்
சனி			சூரியன்
குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்

உச்சவீடுகள்.

சுக்கிரன்	சூரியன்	சந்திரன்	
			குரு
செவ்வாய்			
	ராகு கேது	சனி	புதன்

நீசவீடுகள்.

புதன்	சனி	ராகு கேது	
			செவ்வாய்
குரு			
	சந்திரன்	சூரியன்	சுக்கிரன்

கிரகங்கள் நீசமாக இருக்கப் பிறந்தவர் சில காலங்களில் உயர்நிலை அடைவதையும் நாம் பார்க்கிறோம். கிரந்தகர்த்தாக்களின் அபிப்பிராயங்கள் இந்த நீசபங்கம் காண்பதற்குப் பலவகைப்பட்டனவாக இருக்கின்றன. கீழே சிலவற்றைக் கூறுவாம்.

(1) உச்சக்கிரகத்தோடு சேர்தல்.

(2) உச்சக்கிரக திருஷ்டி.

(3) நீசவீட்டுக்குரிய கிரகம் அல்லது அவ்வீட்டுக்கு உச்சக்கிரகம் சுபக்கிரககேந்திரம் பெறல்.

இவ்வகையாக ஏற்படின் குடிசையிற் பிறந்தோன் மாளிகையிற் காலங்கழிக்கிறான்.

ஸ்ரீபதியின்

அனுபவ ஜாதகம்.

(தமிழ்ப் பதிப்பு.)

இந்நூலின் முதற்பாகமும் இரண்டாம்பாகமும் சேர்த்து ஒரேபுத்தகமாக, பாக்கட் சைஸில், உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் அச்சிடப்பெற்று கூடியசீக்கிரம் வெளியிடப்படும்.

விலை ரூபா இரண்டரை.

குறிப்பு:— இந்த இரண்டாம்பாகம் மட்டும் வாங்கியவர்களுக்கு ஷை இருபாசமும் சேர்ந்த புத்தகம் இரண்டுரூபா விலைக்குக் கொடுக்கப்படும்.

ஜாதக பாஸ்கரன்.

(மூன்றாம் பதிப்பு)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிரபல ஜோதிஷராயிருந்த பிரமஸ்ரீ வி. சபாபதி ஐயரால் வசனநடையில் இயற்றப்பெற்றதும், ஜோதிஷங் கற்க விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானதுமான ஜாதக பாஸ்கரன் என்னும் இப்புஸ்தகம் இரண்டாம் பதிப்பு விலையாகிவிட்டதினால் புஸ்தகம் கிடைக்காதிருந்து, இப்போது மூன்றாம் பதிப்பு மிகவும் சுத்தமாகவும், நல்ல கிளேஸ் கடிதத்திலும் அச்சிடப்பெற்றுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்று வெளிவந்துவிட்டது. இப்பதிப்புக் கூடியவரை திருத்தமாக அச்சிடப்பட்டிருப்பதுமன்றி மகாதெசாபுத்தி அந்தரங்களும் சேர்க்கப்பெற்றுள்ளது. பலர் இந்நூலைக் கற்றுச் சோதிட விற்பன்னர்களாய்ப் பலன்கூறிவருவது யாவரும் அறிந்த விஷயமானதினால் இதைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை.

இதன் விலை ரூபா மூன்றரை. (தபாற்செலவு வேறு.)

Sripaty's Astrological Primer விலை ரூபா ... 1-00

சோதிடவிலாசபுத்தகசாலை, கோக்குவில். (Ceylon.)

சோதிடபரிபாலினி.

(மாதமிருமுறை பிரசுரிக்கப்படுவது.)

இது யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிடபரிபாலனமடத்திலிருந்து பிரபவஹூ (17-4-27) முதல் வெளியிடப்பட்டுவரும் புதினப்பத்திரிகையாகும்.

நிகழும் தாதுஹூ சித்திரைமாதம் முதல் 10-வது ஆண்டு ஆரம்பமாகியிருக்கிறது.

இதில், ஒவ்வொரு நக்ஷத்திரத்திற் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு பக்ஷமும் நிகழும் கோசரபலன்கள் எழுதப்பட்டுவருகின்றன. உலக வர்த்தமானங்களும் இராஜீய, தேசீய விஷயங்களும் எழுதப்பட்டுவருவதோடு, தொடர்கதைகளும், இலக்கிய, சோதிட நூல்களும் இதில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுவருகின்றன.

இலங்கை இந்தியாவிற்கு வருடசந்தா ரூபா **2—00.**

மற்றைய தேசங்களுக்கு ஷிலிங் மூன்றரை.

(முற்பணமாகச் செலுத்தவேண்டியது.)

மானேஜர், சோதிடபரிபாலினி, கோக்குவில், சிலோன்.

———

Sripaty's

PRACTICAL HOROSCOPY.

(English)

SECOND EDITION.

Now in print.

Price 2/50.

A very interesting and handy work with five forms at the end for noting down the horoscopes of your family, by the well-known specialist of Ceylon.

(Book Early!)

Consult Astrologer Sripaty (Jnr.)

"Bhaskaralaya"

Kalatty, Vannarponnai,

Jaffna. (Ceylon.)

Enclose stamped cover, postal coupon or shilling postal order according to your requirements for a prompt reply. Hrs. 9 to 11 A. M. by appointment.